சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 03.06.2026**

**முன்னிலை**

## திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,
## மாநில தகவல் ஆணையர்

•••••

**வழக்கு எண். NC 3481/E/2021 (SA 9706/E/2021), NC 378/E/2022 (SA 9706/E/2021)**

திரு.S.காப்பிதுரை .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மனுதாரரால் ஒரே பொருள் குறித்து இவ்வாணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்கள் வழக்கு எண்கள் NC 3481/E/2021 (SA 9706/E/2021), NC 378/E/2022 (SA 9706/E/2021)-ஆக இவ்வாணையத்தால் பதிவு செய்யப்பட்டு ஏற்கனவே இவ்வாணயத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. அதில் **வழக்கு எண்.NC 3481/E/2021 (SA 9706/E/2021)-ஆனது** 30.06.2025 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் மதுரை உதவி நிலவரித்திட்ட அலுவலர் உத்திரவு (Copy of Assistant Settlement Officer, Madurai) ந.க.ஆ2/10526/1995, நாள் 22.01.1996 தொடர்புடைய கோப்பின் முழு நகலினை தகவலாக வழங்கக் கோரியிருந்தார்.

b) மேற்படி தகவல் குறித்த ஆவணம் (1) பொதுத் தவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை மற்றும் (2) பொதுத் தகவல் அலுவலர்/ தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நிலஅளவை

அலுவலகம், மதுரை ஆகியோர் தங்கள் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இல்லை என தெரிவித்திருந்தனர். அதன் விபரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

c) மேலும், 30.06.2025 தேதியிட்ட விசாரணையின் போது மனுதாரர் தான் கோரிய ஆவணங்கள் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், அழகப்பபுரம் கிராம சர்வே எண்.458/1-க்கு 1996-ஆம் ஆண்டு உதவி நிலவரி அலுவலர் மதுரை அவர்களால் பட்டா வழங்கல் சம்பந்தமான நிரந்தர ஆவணங்கள் எனவும், எனவே இவ்வழக்கில் தான் கோரிய கடித நகல் மற்றும் தொடர்புடைய Settlement Proceedings கோப்பின் அனைத்துப் பக்கங்களும் எந்த அலுவலகத்தில் இருப்பினும் அதனை பெற்று வழங்கிட கோரியிருந்தார்.

d) 30.06.2025 தேதியிட்ட விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/ உதவி நிலவரித்திட்ட அலுவலர் (தெற்கு) நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை அவர்களும், வருவாய் (நி.அ.1-1) அரசு ஆணை (1டி) எண்.433, நாள் 11.09.2001-ன்படி மதுரை உதவி நிலவரித்திட்ட அலுவலர் உத்திரவு (Copy of Assistant Settlement Officer, Madurai) ந.க.ஆ2/10526/1995, நாள் 22.01.1996 தொடர்புடைய கோப்பானது, கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் ஒப்படை செய்யப்பட்டிருக்க வேண்டும் என எடுத்துரைத்துள்ளார்.

e) எனவே, மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை அவர்கள் இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள <u>மதுரை உதவி நிலவரித்திட்ட அலுவலர் உத்திரவு (Copy of Assistant Settlement Officer, Madurai) ந.க.ஆ2/10526/1995, நாள் 22.01.1996</u> ஆவணம் சம்மந்தப்பட்ட கன்னியாகுமரி வருவாய் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது குறித்தும் மேற்படி ஆவணம் தற்போது எந்த அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ளது என்பத குறித்தும் விசாரணை மேற்கொண்டு, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இவ்வாணையத்தில் **18.09.2025 அன்று தங்கள் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டிருந்தது.**

2. மேலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மற்றொரு **<u>வழக்கு எண். NC 378/E/2022 (SA_9706/E/2021)-ஆனது</u>** 23.07.2025 அன்று இவ்வாணையத்தால் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டிருந்தது:-

a) மனுதாரர் இதே வழக்கு (SA 9706/E/2021) குறித்து அனுப்பிய வேறொரு ஆணை நிறைவேற்றாமை மனு (NC 378/விசாரணை/2022), இவ்வாணையத்தால் 30.06.2025 அன்று விசாரிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதால், அந்த உத்தரவின்படி மாவட்ட வருவாய் அலுவலர் மதுரை அவர்கள் இவ்விரு வழக்குகளிலும் மனுதாரருக்கு தகவல் வழங்கிவிட்டு அதுகுறித்த அறிக்கை அவரது அலுவலக பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக இவ்வாணையத்தில் 15.10.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

3. மேற்படி ஒரே பொருள் குறித்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு வழக்குகள் [வழக்கு எண்கள்.NC 3481/E/2021 (SA 9706/E/2021), NC 378/E/2022 (SA_9706/E/2021)] குறித்து இவ்வாணையத்தால் 30.06.2025 மற்றும் 23.07.2025 ஆகிய தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திரு.பார்த்திபன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை அவர்கள் சார்பு திருமதி.வெற்றிச்செல்வி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மதுரை அவர்கள் இவ்வாணையத்தில் 15.05.2026-ல் நேரில் ஆஜராகி, சமர்ப்பித்துள்ள 13.05.2026 தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலர் மதுரை அவர்களின் அறிக்கையில், _ஆணையத்தின் 30.06.2025 மற்றும் 23.07.2025 தேதியிட்ட உத்தரவின்படி, மனுதாரர் திரு.காப்பிதுரை என்பவரின் மகன் திரு.ஆண்டோ நிர்மல் என்பவர் 08.05.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவு வைப்பறைக்கு ஆஜராகி, ஆய்வு செய்ததாகவும் (அதற்கான புகைப்படைத்தினை இணைத்து), ஆய்வு செய்து மனுதாரர் மகன் தனது வாக்குமூலத்தை கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி மனுதாரரின் 08.05.2026 தேதியிட்ட எழுத்து மூலமான கடிதத்தில் (மேற்படி கடிதத்தினை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மதுரை அவர்களிடம் அளித்துள்ளார்) மாவட்ட ஆட்சியர் அலுவலக பதிவறையினை பார்வையிட்டதாகவும், தான் கோரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும், தொடர்புடைய வேறு ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், அதில் 39 பக்கங்கள் கொண்ட தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்,_

4. மேலும், மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 16.05.2026 தேதியிட்ட (இரண்டு கடிதங்கள்) கடிதங்களில், இரண்டு வழக்கு எண்களையும் குறிப்பிட்டு [வழக்கு எண்கள்.NC 3481/E/2021 (SA 9706/E/2021), NC 378/E/2022 (SA 9706/E/2021)] கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்:-

I. தகவல் ஆணையத்தின் விசாரணை மற்றும் உத்தரவின்படி, சென்னை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குனர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் நேரடி கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், எனினும் கோப்பு இதுவரை எங்கும் கிடைக்கப்பெறவில்லை எனவும்,

II. அரசாணையின்படி, மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலகத்தின் கோப்புகள் மற்றும் பதிவேடுகள் மதுரை ஆவணக் காப்பகத்திலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை ஆவணக் காப்பகத்தில் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை எனவும்,

III. எனவே, மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலக கோப்பு ந.க.ஆ2/10526/1995 கோப்பினை தேடி கண்டுபிடிக்கும் முயற்சியின் பகுதியாக 2001-ஆம் ஆண்டு மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலகம் கலைக்கப்பட்டபோது, வருவாய்த்துறை அரசாணை எண்.

(1D) 433, நாள் 11.09.2001-ன்படி மதுரை ஆவண காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்ட கோப்புகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட அனுமதி வழங்குமாறும்,

IV. மேலும் கோப்பு எண்.அ2/27/2000 மற்றும் மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலகம் கோப்பு எண்.அ1/5832/200 கோப்புகள் பராமரிக்கப்படவில்லை அல்லது அழிக்கப்பட்டிருந்தால் அதற்கான குறிப்புகளை வழங்க உத்தரவிடுமாறும் ஆணையத்தைக் கோரியுள்ளார்.

5. மனுதாரரின் கடிதம், பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

A. இவ்வழக்குகளில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள Copy of Assistant Settlement Office, Madurai order No.ந.க.ஆ2/10526/95, dated 22.01.1996 தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும் இல்லை என்று தகவல் தரப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி நகலினை பெற்றுத் தருமாறு Assistant Settlement Officer (South)/ PIO, Director of Survey and Settlement Survey House, Chepuak, Chennai அவர்களுக்கு தாக்கல் செய்துள்ளார்.

B. மேற்படி கோப்பானது, இவ்வாணையத்தின் விசாரணை மற்றும் உத்தரவின்படி சென்னை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குனர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் நேரடி கள ஆய்வுகள் மேற்கொண்டதாகவும், எனினும் கோப்பு இதுவரை எங்கும் கிடைக்கப்பெறவில்லை என மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 16.05.2026 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

C. மேலும், மனுதாரர் சார்பு அவரது மகன், 08.05.2026 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வைப்பறையில் ஆவணங்களை நேரடியாக கள ஆய்வு செய்தததில், மனுதாரர் கோரிய ஆவணம் இல்லை என தெரிந்து கொண்டுள்ளார் என்பதும், வேறுசில ஆவணங்களின் தன்பதிவேடு மற்றும் பகிர்மான பதிவேட்டின் 39 பக்கங்கள் நகல்களை மனுதாரர் (சார்பு அவரது மகன்) பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும், மனுதாரர் (சார்பு அவரது மகன்) 08.05.2026 தேதியிட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மதுரை அவர்களிடம் கடிதம் அறித்துள்ளார் என்பதும் இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

D. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை அவர்கள் இவ்வாணை

கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள Copy of Assistant Settlement Office, Madurai order No.ந.க.ஆ2/10526/95, dated 22.01.1996, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குனர் அலுவலக கோப்பு எண்.அ2/27/2000, மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலக கோப்பு எண்.அ1/5832/200 ஆகிய கோப்புகள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லாத பட்சத்தில், மேற்படி ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை என்பதை **ஆணை உறுதி பிரமாண பத்திரத்தில் (Sworn Affidavit)** குறிப்பிட்டு, அதனை, கட்டணம் ஏதுமின்றி, **அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல்** அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.06.2026-க்குள் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்க, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

E. மேலும், **பொதுத் தகவல் அலுவலர், மதுரை ஆவண காப்பகம், மதுரை அவர்கள்**, இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள **மதுரை உதவி நிலவரித் திட்ட அலுவலக கோப்பு ந.க.ஆ2/10526/1995 கோப்பு குறித்த ஆவணங்களை**, மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ், பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள மனுதாரருக்கு கடிதம் அனுப்ப பொதுத் தகவல் அலுவலர், ஆவண காப்பகம், மதுரை அவர்களுக்கு (மனுதாரர் ஆவணங்களை பார்வையிடும் போது, புகைப்படம் அல்லது வீடியோ பதிவு செய்யவும்) உத்தரவிடப்படுகிறது.

F. அதன்படி, மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு, அவருக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் ஆவணங்களின் நகலை அவர் குறிப்பிட்டுக் கோரும் தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி, இலவசமாக, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை அவர்களுக்கு முகவரியிட **பொதுத் தகவல் அலுவலர், ஆவணகாப்பகம், மதுரை அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுகிறது.**

G. மேற்கண்டவாறு பெறப்பட்ட அறிக்கையின் நகலினை, இவ்வாணையத்தில் 30.06.2026-க்குள் நேரில் சமர்ப்பிக்க **பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மதுரை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC 3481/E/2021 (SA 9706/E/2021),**
**NC 378/E/2022 (SA 9706/E/2021)**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை-

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆவண காப்பகம், (District Record Centre,
எண்.9, பழைய இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
காந்தி நகர், மதுரை - 625 020.

**மேல்முறையீட்டாளர்**
திரு.S.காப்பிதுரை,
10.35, கோவில் தெரு,
அழகப்பபுரம், கன்னியாகுமரி மாவட்டம் - 629 401.

Copy to: File MP/PA**,**